பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2052 | மாசி 12 | புதன்கிழமை | 24.02.2021 | கதிர் 342

## அவசர கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தும் கோட்டா



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட அரசியல் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் ஆளுங் கட்சியில் உள்ள பங்காளிக் கட்சிகளின்

☞ 2

# பொறுப்புக் கூறலை நிலைநிறுத்த மாற்று வழிகளையும் தேட நேரும்!

### அமெரிக்க தூதுவர் யாழில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,பெப்ரவரி 24

இலங்கையின் யுத்தத்தில் இறுதிக் கட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமக்கு நீதிவேண்டி பன்னிரண்டு நீண்ட ஆண்டுகள்காத்திருக்கின்றனர்.நிலைமை இப்படியே நீடிக்க முடியாது. இறைமையுள்ள இலங்கை நாட்டின் நேரடிப்பங்களிப்போடு, சர்வதேச நீதிமுறை நியமங்களுக்கு அமைய விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட வேண்டும். அதைச் செய்ய முடியாத நிலைமை ஏற்படுமெனில்மாற்றுமார்க்கம்குறித்தும் ஆராய நேரிடும். அவை குறித்துத்தான் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இப்போது ஆராயப்படுகின்றது.

☞ 2

## இலங்கைக்கு எதிரான பிரேரணை வலுமிக்கதாக இருக்க வேண்டும்!

### பலாலியில் அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

ஜெனிவாவில் இலங்கை தொடர்பானபுதியபிரேரணைக் குப் பின்னால் இருந்து அமெரிக்கா செயற்படும்.

- இவ்வாறு இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி டெப்லிட்ஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்



பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனிடம் இன்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள்களாகத்தங்கியிருந்த அமெரிக்கத் தூதுவரைக் கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்காகப் பலாலியில்

☞ 2

## இறுதி ஆட்சி மாற்றமே நாட்டுக்கு ஆபத்தானது

### ரணில் சுட்டிக்காட்டு



இலங்கையில் இறுதியாக இடம்பெற்ற ஆட்சி மாற்றமே நாட்டுக்கு ஆபத்தாக மாறியுள்ளது.

- இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர்

☞ 2

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செயலாளர்

## லீலாதேவியிடமும் ரி.ஐ.டி. விசாரணை



(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு, கிழக்குவலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜாவிடம் பயங்கரவாதத்

☞ 2

## இலங்கையின் பொறுப்புக் கூறலை ஐ.நா. சபை உறுதிசெய்ய வேண்டும்

### அமெரிக்கா கோரிக்கை

ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள பிரேரணைக்கு ஒத்துழைப்பு வழங்க ஐ.நா. மனித உரிமைகள் சபையை ஊக்குவிப்பதாக அமெரிக்காவின் வெளியுறவுத்துறை இராஜாங்கச் செயலாளர் டோனி பிளின்கென் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடர் நடந்துவரும் நிலையில் அதில் உரையாற்றும்போதே

☞ 2



## மீன்பிடித் துறைமுகம் வேண்டாம் பேசாலை மீனவர்கள் திட்டவட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.24


பேசாலையில் அமைக்க திட்டமிடப்படும் மீன்பிடித் துறைமுகத்தின் பின்னால் உள்ள அரசியல் தொடர்பில் எம்மால் பகிரங்கமாக வாய் திறந்து பேச முடியவில்லை. அதனால் அந்தத் துறைமுகம் எமக்கு வேண்டாம் என்பதனை உறுதியாக கூறுகின்றோம் என அப்பகுதி மக்கள் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகளிடம் நேரில் தெரிவித்தனர்.

வடக்கிற்கு இரு நாள் பயணமாக வந்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் குழுவினர்

☞ 2

## தமிழர்களுக்கு நீதி கிடைக்க இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் அமெரிக்கா

### தூதுவருடனான சந்திப்பில் யாழ். மேயர் எடுத்துரைப்பு



(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி டெப்லிட்ஸை யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் இன்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது குறிப்பாக காணி

☞ 2

## இலங்கை ஜனாஸா விவகாரம் தொடர்பாக இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம் கவலை



இலங்கை முஸ்லிம்களின் இறுதி உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதையிட்டு இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியத்தின் செயலாளர் யூசுப் அல் உதைமீன் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது அமர்வில் உரையாற்றும்போதே, இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளுக்கு மாற்றமாக, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின்உடல்கள்எரிக்கப்படுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்க உரிமையை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம்

☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



## பொறுப்புக் கூறலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு இன்று யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்திருக்கின்றார் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி.ரெப்லிட்ஸ் அம்மையார்.

யாழ். ஊடகங்களில் பிரதிநிதிகளை இன்று காலை தனியார் விடுதி ஒன்றில் அவர் சந்தித்தார். அப்போது கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை ஓர் இறைமையுள்ள நாடு. அதன் உள் விடயங்களில் தலையிடுவதோ இலங்கையை தொல்லைப்படுத்துவதோ அமெரிக்காவின் நோக்கம் அல்ல. ஆனாலும் உலகம் முழுவதும் மனித உரிமைகள் பேணப்படுவதிலும், அவை மீறப்பட்டமையால் பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதிலும் அதிக கரிசனை காட்டி வரும் நாடு அமெரிக்கா. அதனால்தான் இந்த விடயத்தில் நாம் அதிக ஈடுபாடுகாட்டி வருகின்றோம். தொடர்ந்தும் காட்டுவோம்.

யுத்த காலத்தில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித மாண்புகளுக்கு எதிரான கொடூரங்களினால் பாதிக்கப்பட்டோர் கடந்த பன்னிரண்டு ஆண்டுகள் நீதி வேண்டி பரிதவிப்போடு காத்து நிற்கின்றார்கள்.

இலங்கை இறைமையுள்ள, ஜனநாயக நாடு. தனது மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் சர்வதேச நீதி விசாரணை முறை நியமங்களுக்கு அமைவாகத் தமது மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் முதல் கடமையும் பொறுப்பும் இலங்கையைச் சார்ந்தது.

அவர்கள்பன்னிரண்டுஆண்டுகளாக காத்திருக்கின்றார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக்கூட அறியாது பன்னிரண்டு ஆண்டுகளாகத் தவிக்கின்றார்கள். அத்தகையோரின் மன நிலை எத்தகையது என்பது புரிகின்றது.

நிலைமை இப்படி நீடித்துச் செல்ல முடியாது. இனியும் நீதி தாமதிக்கப்பட முடியாது.

மனித உரிமைகள் நிலைநாட்டப்படுவதை உறுதி செய்யும் கடப்பாடு அமெரிக்கா உட்பட ஒவ்வொரு நாட்டுக்கும் உள்ளது.

அதனால், இழைக்கப்பட்ட அத்துமீறல்களுக்கு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக்கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீளநிகழாமையைஉறுதிப்படுத்தும் வகையிலான தீர்வுகளை கண்டறிய வழிசெய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றோம். அதுவே, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இப்போது முழு அளவில் முயற்சியாக முன்னெடுக்கப்படுகின்றது.

இறைமையுள்ள, ஜனநாயக நாடு என்ற வகையில் - மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசையும், சட்டத்தின் ஆட்சியையும் கொண்ட நாடு என்ற முறையில் மனித உரிமைகளை நிலைநாட்டும் இந்த விடயத்தில் ஆக்கபூர்வமான பிரதிபலிப்புக்களைக்காட்டிதனது கடப்பாட்டை நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு. அதையே நாம் வலியுறுத்தி நிற்கின்றோம். ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலும் அதையே செய்கின்றது.

பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்கான தனது பொறுப்பை உரிய தரப்புகள் உதாசீனம் செய்தால் மாற்று வழிகளை சர்வதேச சமூகம் தேட நிர்ப்பந்திக்கப்படும். அந்தக் கட்டாயம் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கும் ஏற்படும்.

சர்வதேசங்களிலும் மனித உரிமைகளை நிலை நிறுத்தும் பொறுப்பில் காத்திரமாகவும் ஈடுபாட்டுடனும் பங்களிக்க ஜோ பைடனின் அமெரிக்க அரசு விரும்புகின்றது. அதனால் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் அமெரிக்கா அதிக பங்களிப்பை எதிர்காலத்தில் வழங்குவதற்கு முன்நிற்கும். - இவ்வாறு அமெரிக்கத் தூதுவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழர்களுக்கு நீதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கிரமிப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஜெனிவாவின் ஊடாகவும் மற்றும் பல வழிகளிலும் தமிழர்களுக்கு நீதி கிடைக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று யாழ். மாநகர மேயர் வலியுறுத்தினார்.

யாழ். பொது நூலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி டெப்லிட்ஸ் நூலகத்தையும் பார்வையிட்டார்.

## இலங்கை ஜனாஸா

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. தீர்மானங்களுக்கு அமைய அனைத்து சமூகங்களினதும் மத உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும்யூசுப்அல்உதைமீன்கேட்டுக்கொண்டுள்ளார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செயற்பாடுகளுக்கு இஸ்லாமிய நாடுகளின் ஆதரவையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

## மீன்பிடித் துறைமுகம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மன்னாரிக்கு பயணித்து பேசாலையில் இரு நூறு கோடி ரூபா செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்ட துறைமுகம் தொடர்பில் கலந்துரையாடினர். இதன் போதே மேற்கண்டவாறு அப்பகுதி மீனவ பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. அவர்கள் அங்கே மேலும் விவரம் தெரிவிக்கையில் -

மன்னார் பேசாலையில் துறைமுகத்தை நாமும் கோரினோம். ஆனால் தற்போது இதன் மூலம் கிடைக்கும் நன்மையைவிட எமக்கு ஏற்படும் ஆபத்துக்கள் அதிகம் என்பதனை தற்போதே உணர்கின்றோம். எனவே எமது பிரதேசத்தில் இந்த திட்டம் வேண்டாம். - என்றனர்.

இதனை ஏற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் உங்கள் விருப்பம் இன்றி துறைமுகம் திணிக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்தனர்.

## இலங்கையின் பொறுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை இராஜாங்கச் செயலாளர் டோனி பிளின்கென் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் கடந்த கால துன்புறுத்தல்கள் மீதான பொறுப்புக்கூறலின்மை உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு அமெரிக்கா மீண்டும் ஐ. நா. மனித உரிமைகள் சபையுடன் இணைந்துகொள்ளத் தீர்மானித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## லீலாதேவியிடமும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்புப் பிரிவினர் இன்று விசாரணை மேற்கொண்டனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என அவர் கூறினார்.

இதன்போது வங்கிக் கணக்குகள், வங்கிக்குப் பணம் பரிமாறப்படுவது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணை செய்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2010ஆம் ஆண்டு ஜெனிவா சென்றமை, அங்கு பேசப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் என்னிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த விசாரணையின்போது, எமக்கு நீதி கிடைக்கவில்லை, இலங்கை அரசிடம் அழுத்தம் கொடுத்தாவது எமது பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள் என்று ஜெனிவா சென்றிருந்தபோது கோரிக்கை முன்வைத்திருந்தேன். அத்தோடு, மேலும் பல விடயங்களை அவர்கள் என்னிடம் வினாவினர்- என்றார்.

## இலங்கைக்கு எதிரான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்திறங்கிய விமானத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் வந்திறங்கினார். அவ்வேளை அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணிக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அரை மணி நேரம் விமான நிலையத்தில் இருவரும் சந்தித்து உரையாடினர். இதன்போதே அமெரிக்க தூதுவர் மேற்கண்டவாறு கூறினார். குறித்த சந்திப்பின்போது மேலும் பல விடயங்கள் உரையாடப்பட்டன.

இம்முறையும்இலங்கைதொடர்பான ஒரு பிரேரணை வருவது மிகவும் இன்றியமையாதது .இருப்பினும் அதன் உள்ளடக்கம் தொடர்பான சர்ச்சைகளுக்கு அப்பால் பிரேரணை கண்டிப்பாக வலுமிக்கதாக வர வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார் என அறிய முடிந்தது.

## இறுதி ஆட்சி மாற்றமே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகியுள்ளது. இந்தக் கூட்டத்தொடர் இலங்கைக்கு ஆபத்தானதாக இருக்கின்றது. புதிய பிரேரணையையும் இம்முறை இலங்கை எதிர்கொள்ளவுள்ளது.

இலங்கையில் இறுதியாக இடம்பெற்ற ஆட்சி மாற்றமே நாட்டுக்கு ஆபத்தாக மாறியுள்ளது. இந்த அரசு வெளிநாட்டுக் கொள்கைகளை உரிய வகையில் கையாளவில்லை. நட்பு நாடுகளைக் கூடப் பகைக்கும் வகையிலேயே இந்த அரசு செயற்படுகின்றது.

எனவே, ஜெனிவாவில் இலங்கைக்கு நட்பு நாடுகள் கூட ஆதரவு வழங்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

எமது நல்லாட்சியில் ஜெனிவா விவகாரத்தை - அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நாட்டுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் - வெளி அழுத்தங்கள் வராத வகையில் நாம் கையாண்டோம். ஆனால், அந்தச் செயற்றிறன் தற்போதைய அரசிடம் இல்லை. - என்றார்.

## அவசர கட்சித் தலைவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களுக்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாளை மாலை 6.30 மணிக்கு, ஜனாதிபதி செயலகத்தில் மேற்படி சந்திப்பு நடைபெறவுள்ளது.

**கடை வாடகைக்கு தேவை**

யாழ்ப்பாணம் K.K.S .வீதியில் யாழ். இந்து கல்லூரி தொடக்கம் மருதனார் மடம் வரையான எல்லைக்குள் கடை ஒன்று வாடகைக்கு உடன் தேவை.
**தொடர்புகளுக்கு - 0774135036**

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பந்து இந்தியாவின் களத்தில்!

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பொறுப்புத் தொடர்பில் மிக முக்கியமான விடயம் ஒன்றை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கின்றார் தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

இலங்கையை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றுக்கு மட்டுமின்றி, சர்வதேச நீதிமன்றத்துக்கும் (International Court of Justice) கொண்டு செல்லும் நடவடிக்கையை இந்தியாவே முன்னின்று செயற்படுத்த வேண்டும் என்று அவர் பகிரங்கமாகக் கோரியிருக்கின்றார்.

'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும் இலங்கைத் தமிழரின் வருங்காலமும் – ஒரு சர்வதேசக் கண்ணோட்டம்' என்ற தலைப்பில் நேற்றிரவு நடைபெற்ற மெய்நிகர் அரங்கில் உரையாற்றும்போதே அவர் இப்படிக் கோரியிருக்கின்றார்.

இந்தக் கோரிக்கையை அவர் பகிரங்கமாக வெளியிட்ட சமய, சந்தர்ப்பம் முக்கியமானது.

ஒருபுறம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான பிரேரணையை பிரிட்டன், கனடா, ஜேர்மன், மொன்ரிநிக்கரோ, மஸிடோனியா ஆகியவை முன்வைத்திருக்கும் இச் சமயத்தில் –

அந்தப் பிரேரணை முயற்சியை இந்தியா ஆதரிக்குமா, எதிர்க்குமா, அல்லது மதில் மேல் பூனையாக நடுநிலை நாடகம் ஆடுமா என்றெல்லாம் பேச்சடிபடுகையில் –

ஜெனிவா பிரேரணைக்கு அப்பால் சென்று யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை இழைத்தமைக்காக இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் ஆள்படுத்தும் நடவடிக்கையை இந்தியாவே முன்னின்று எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

அது மாத்திரமல்ல, இன்னொரு மிக முக்கியமான அம்சமும் இதில் உண்டு.

நேற்றுக் காலையில் தமது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சகாக்கள் சுரேஷ் பிறேமச்சந்திரன், அனந்தி சசிதரன், சிற்பரன் ஆகியோர் சகிதம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவைச் சந்தித்த நினைவு மாற முன்னரே நேற்று முன்னிரவில் இந்தப் பேச்சை ஆற்றியிருக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

இந்தியத் தூதுவருடனான சந்திப்பில் இந்தியா ஆற்ற வேண்டும் எனத் தாம் எதிர்பார்க்கும் விடயத்தை நேரடியாக அவர் எடுத்துரைத்தாரா என்பது தெரியவில்லை. அச்சந்திப்புத் தொடர்பாக வெளியான செய்தியில் இவ்வளவு வெளிப்படையாக இந்தியாவை நீதியரசர் விக்னேஸ்வரன் கோரினார் என்று குறிப்பிடப்படவில்லை.

இந்தியத் தூதுவருடனான காலை சந்திப்பின் பின்னர் முன்னிரவில், இலங்கை விடயத்தில் இந்தியத் தலையீடு எத்தகையதாக அமைய வேண்டும் என்று அவர் சுட்டியிருக்கின்றார்.

இன்று காலை இப் பத்தியில் நாம் சுட்டிக் காட்டியபடி, ஜெனிவாவில் இலங்கை தொடர்பாகக் கொண்டு வரப்படும் பிரேரணை தொடர்பில் இந்தியாவின் போக்கு இப்படியும், அப்படியும் அல்லாடுவதாகத் தோன்றுகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை வியாழக்கிழமை கோயம்புத்தூருக்கு வருகின்றார். ஜெனிவா விவகாரம் இப்போது சூடு பிடித்திருப்பதால் அது பற்றிய தனது அரசின் நிலைப்பாட்டை சில சமயம் அவர் வெளிப்படையாகக் கோவையில் கோடி காட்டுவார் என எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே பத்துத் தினங்களுக்கு முன்னர் சென்னைக்கு வந்திருந்த அவர் "இலங்கையில் உள்ள எங்களின் தமிழ்ச் சகோதர, சகோதரிகள் கண்ணியம், சமத்துவம், நீதி மற்றும் அமைதி என சகல உரிமைகளுடனும் வாழ்வதை உறுதி செய்வதில் நாங்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம் அதில் நாங்கள் எப்போதும் உறுதியாக இருப்போம்" என்று தெரிவித்திருந்தார்.

இப்போது நாளை கோயம்புத்தூரில் இதற்கு அப்பால் சென்று சில விடயங்களை அவர் வெளிப்படுத்துவார் என இராஜதந்திர வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

நீதியரசர் விக்னேஸ்வரன் நேற்று முன்னிரவு சுட்டிக் காட்டியிருக்கின்றமை போல

இந்தியா தனது தென்கோடியில் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும், இலங்கையின் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்கென உச்சப்பட்சமான நிரந்தரமான அதிகாரக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், இந்தியாவுக்கும் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தரப்பமே ஜெனிவா அமர்வும் இந்தப் பிரேரணையுமாகும். இந்தப் பிரேரணையில் இலங்கை விடயத்தை விசாரிக்கும் பொறுப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு வலியுறுத்துவதன் மூலம் இதனை இந்தியா எட்ட முடியும் என்பது சரியானதுதான்.

இலங்கையில் இராஜதந்திர சூழ்ச்சிகளுக்குள் சிக்கி இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை இந்தியா நழுவ விட்டு விடக் கூடாது என்று நீதியரசர் விக்னேஸ்வரன் எச்சரிக்கின்றமையையும் புதுடில்லி கவனத்தில் கொள்ள வேண்டும்.

மீண்டும் வலியுறுத்துகிறோம். இலங்கைத் தீவில் தங்களின் உண்மையான நண்பன் யார், கபட எதிரி யார் என்பதை இப்போதாவது இந்தியா சரியாகத் தீர்மானித்து செயற்பட வேண்டும்.

# பிரபாவைக் கொன்றேன் என்ற கோட்டாபய மீது அதற்காகவே நடவடிக்கை எடுக்க வேண்டினோம்

## அமெ. தூதுவருடனான யாழ் சந்திப்பு குறித்து சிறிதரன் எம்.பி. ஊடகங்களுக்குத் தகவல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.24



பிரபாகரனை நான் கொன்றேன் என்று அண்மையில் உகுண பிரதேச நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய சொன்னதே மனித உரிமை மீறலுக்கான பெரிய சாட்சியம். அதை வைத்தே அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ் இடம் தமிழ் அரசுக் கட்சி வலியுறுத்தியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ்க்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் ஆகியோருக்கிடையில் இன்று காலை 7.00 மணியளவில் தனியார் விடுதி ஒன்றில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போதே மேற்குறித்த விடயத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்அமெரிக்கதூதுவர்அலைனாடெப்பிலிட்ஸ் இடம் வலியுறுத்தினார்.

குறித்த கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக சிவஞானம் சிறிதரன் மேலும் குறிப்பிடுகையில் –

ஜெனிவாவில் கொண்டுவரப்பட இருக்கின்ற தீர்மானம் தொடர்பில் மற்றும் அந்த தீர்மானத்திற்கு இருக்கின்ற சவால்கள், அந்த சவால்களுக்கு முகம் கொடுப்பதில் ஒருங்கிணைந்த நாடுகள் எவ்வாறான விடயங்களை எதிர்கொள்கின்றன, அந்த சவால்களை அவர்கள் எவ்வாறு சமாளிக்க போகிறார்கள், அதற்கு தமிழர்தரப்பான எங்களுடைய பங்களிப்பு என்ன மற்றும் ஏனையநாடுகளுடன் கலந்துரையாட வேண்டிய விடயங்கள் ஆகியன தொடர்பாக ஆராயப்பட்டது

மேலும் இன்று உள்ள களசூழல்கள், தமிழ் மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் மற்றும் இந்த அரசாங்கம் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டம் நடந்து முடிந்த பின்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர்கள், பொதுமக்கள் போன்றோரை விசாரணை என்ற போர்வையில் அச்சுறுத்தி வருவதையும் நாங்கள் அவருடன் கலந்துரையாடியுள்ளோம்.

அத்துடன் அண்மையில் அம்பாறையில் உகுண பிரதேச நிகழ்வில் பிரபாகரனை நான் கொன்றேன் என்று ஜனாதிபதி கோட்டாபய சொன்னமையே மனித உரிமை மீறலுக்கான பெரிய சாட்சியம். அதை வைத்தே அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ் இடம் வலியுறுத்தினோம்.

அண்மையில் உலகத் தமிழர் பேரவை மனித உரிமைகள் மற்றும் உலகளாவிய நீதி மையம், நியூயோர்க் பல்கலைக்கழகம் அமைதி மற்றும் நீதிக்கான இலங்கை பிரச்சாரம் மற்றும் கனேடிய தமிழர் பேரவை ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய மெய்நிகர் கலந்துரையாடலில் கலந்து கொண்ட போர்க் குற்றங்கள் மற்றும் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஸ்டீபன் ராப், ஸ்ரீலங்காவில் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு செயலாளராக பணியாற்றிய தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களை கொலை செய்ததார் எனத் தம்மிடம் ஒப்புக்கொண்டதாக குறிப்பிட்டிருந்தார்

இவ்வாறான விடயங்களை சாட்சியமாக வைத்து நடவடிக்கை எடுக்க முடியும் என அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ் இடம் சுட்டிக்காட்டினோம்.– என்றார்.

# ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் உள்வாங்கப்பட்டோர் சுகாதாரத் திணைக்களத்துக்கு அமர்த்தப்படமாட்டார்கள்!

## ஜனாதிபதி கோட்டா அதிரடி அறிவிப்பு





ஒரு லட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் பெற்றுள்ளவர்கள் நிரந்தர ஊழியர்களாக சுகாதார சேவையில் உள்வாங்கப்படவுள்ளனர் என பரவிவரும் வதந்தி முற்றிலும் தவறானது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது இவ்வாறானதொரு கருத்து சுகாதார ஊழியர்களுக்கு மத்தியில் பரவிவருவதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்த வேலையில் அதற்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஒரு லட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டம் மிகக் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி அவர்களை வறுமையிலிருந்து விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

முறையான கல்வி அல்லது தொழில்முறை தகுதிகள் அல்லது திறன்கள் இல்லாதவர்கள் மட்டுமே அந்தத் திட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு மருத்துவமனைகள், பாடசாலைகள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களில் தொழிலாளர்கள், துப்புரவு பணிகளில் ஈடுபடும் ஊழியர்கள் மற்றும் இயந்திர இயக்குநர்களாக பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சிக்குப் பின்னர், அவர்களுக்கு அந்தந்த நிறுவனங்களில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும். இருப்பினும், அவர்கள் சுகாதார சேவையில் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்று ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

# 40 லட்சம் டிராக்டர்களை கொண்டுவந்து நாடாளுமன்றத்தை முற்றுகையிடுவோம்

## விவசாய சங்க தலைவர் எச்சரிக்கை



மத்திய அரசின் 3 புதிய விவசாய சட்டங்களை எதிர்த்து டெல்லி எல்லையான சிங்கு, திக்ரி, காஜிப்பூர் ஆகிய இடங்களில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

பஞ்சாப், அரியானா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் ஆயிரக்கணக்கில் குவிந்து தங்களது எதிர்ப்பை தெரிவித்து வருகிறார்கள்.

விவசாய சட்டங்களை திரும்ப பெற மத்திய அரசு ஆர்வம் காட்டவில்லை. அதே நேரத்தில் போராட்டத்தை கைவிட விவசாயிகளும் தயாராக இல்லை.

இதனால் பல கட்டங்களாக நடத்தப்பட்ட பேச்சு தோல்வியில் முடிந்தது. இதனால் விவசாயிகள் தங்களது போராட்டத்தை தீவிரப்படுத்தினர்.

குடியரசு தினத்தன்று டெல்லியில் விவசாயிகள் நடத்திய டிராக்டர் பேரணியில் மிகப்பெரிய வன்முறை ஏற்பட்டது. போராட்டத்தை ஒடுக்கும் வகையில் சம்பவங்கள் நடந்தாலும், விவசாயிகள் மனம் தளராமல் தொடர்ந்து போராடி வருகிறார்கள். அவர்களது போராட்டம் இன்று 91 ஆவது நாளாக நீடிக்கிறது.

இந்த நிலையில் விவசாய சட்டங்களை திரும்பப் பெறாவிட்டால் 40 லட்சம் டிராக்டர்களுடன் நாடாளுமன்றத்தை முற்றுகையிடப் போவதாக விவசாய சங்கத் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் சிகர் பகுதியில் ஐக்கிய கிசான் மோர்ச்சா சங்கம் சார்பில், கிசான் மகா பஞ்சாயத்து பொதுக்கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் அந்த அமைப்பின் தலைவர் ராகேஷ் திகாயத் இதை தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது:-

விவசாய சட்டங்களை திரும்பப் பெறாவிட்டால் இந்த முறை நாடாளுமன்றத்தை நோக்கி பேரணி செல்வோம். எந்த நேரத்திலும் நாங்கள் நாடாளுமன்றத்தை முற்றுகையிட இருக்கிறோம். இதற்காக விவசாயிகள் தயாராக இருக்க வேண்டும்.

இதற்கான திகதி அறிவிக்கப்படும். பேரணிக்கான நேரத்தை அறிவித்துவிட்டு டெல்லியை நோக்கி புறப்படுவோம். முன்பு 4 லட்சம் டிராக்டர்கள் கலந்து கொண்டன. தற்போது 40 லட்சம் டிராக்டர்களுடன் நாடாளுமன்றத்தை முற்றுகையிடுவோம்.

டெல்லி இந்தியா கேட் அருகே உள்ள பூங்காக்களில் நாங்கள் உழவு செய்து பயிர் விதைக்கப் போகிறோம்.

குடியரசு தினத்தன்று டிராக்டர் பேரணியில் வன்முறை வெடித்ததற்கு நாங்கள் பொறுப்பு இல்லை. விவசாயிகளை இழிவுப்படுத்த சதித்திட்டம் தீட்டப்பட்டு இருந்தது.

விவசாயிகள் தேசியக் கொடியை மதிக்கிறார்கள். நேசிக்கிறார்கள். ஆனால் நாங்கள் இந்த நாட்டின் தலைவர்கள் அல்ல. விவசாய சட்டங்களை திரும்பப் பெறாவிட்டால் மிகப்பெரிய கம்பனிகளின் குடோன்களை இடித்து தள்ளவும் நாங்கள் தயங்க மாட்டோம்.

- இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## குஜராத்தின் சூரத் மாநகராட்சியில் எதிர்கட்சி ஆகிறது ஆம் ஆத்மி கட்சி



குஜராத்தில் நடந்து முடிந்த மாநகராட்சி தேர்தலில், சூரத் மாநகராட்சியில் எதிர்க்கட்சி அந்தஸ்தை ஆம் ஆத்மி கட்சி பெற்றுள்ளது.

மொத்தமுள்ள 120 இடங்களில் 27 இடங்களை கைப்பற்றிய ஆம் ஆத்மி, காங்கிரஸ் கட்சியை 3 ஆவது இடத்திற்கு தள்ளியுள்ளது.

இது குறித்து டுவிட்டரில் ஆம் ஆத்மி தலைவரும், டெல்லி முதலமைச்சருமான கெஜ்ரிவால் தமது மகிழ்ச்சியை பகிர்ந்துள்ளார்.

வரும் 28 ஆம் திகதி குஜராத்தில் ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்க உள்ள நிலையில், சூரத்தில் பிரசாரம் செய்யவும் கெஜ்ரிவால் முடிவு செய்துள்ளார்.

## இந்திய பங்கு சந்தைகளில் இன்று ஏற்றத்துடன் தொடங்கிய வர்த்தகம்

இந்திய பங்கு சந்தைகள் ஏற்றத்துடன் வர்த்தகத்தை தொடங்கி உள்ளன. மும்பை பங்கு சந்தையில் சென்செக்ஸ் குறியீட்டு எண் 353 புள்ளிகள் அதிகரித்து 50 ஆயிரத்து 106 புள்ளிகளில் வர்த்தகத்தை தொடங்கியது.



தேசிய பங்கு சந்தையில் நிப்டி 113 புள்ளிகள் உயர்ந்து 14 ஆயிரத்து 820 புள்ளிகளில் வர்த்தகத்தை தொடங்கியது. நிலக்கரி, சிமெண்ட் மற்றும் வங்கி - நிதி நிறுவனங்களின் பங்குகள் உயர்வை சந்தித்தன.

சில மென்பொருள் நிறுவனங்கள், மருந்து - நுகர்வோர் பொருள் தயாரிப்பு நிறுவன பங்குகள் சரிவை சந்தித்தன.

## பயிர்களுக்கு உரிய விலை கிடைக்காதால் ஆத்திரம் பயிர்களை டிராக்டர் ஓட்டி நசுக்கிய விவசாயிகள்

உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில் பயிர்களுக்கு உரிய விலை கிடைக்காத ஆத்திரத்தில் விவசாயிகள் வயல்களில் விளைந்த பயிர்களின் மீது டிராக்டரை ஓட்டி அதனை நசுக்கி நாசம் செய்தனர் இதனால் நன்கு விளைந்து அறுவடைக்குத் தயாராக இருந்த கோதுமை உள்ளிட்ட பயிர்கள் நசுங்கின. வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராட்டம் நடத்தி வரும் விவசாயிகள் இந்த ஆண்டு பயிர்களை இழக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.





# பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் முக்கிய பங்காற்றியவர் ஜெயலலிதா

## பிரதமர் மோடி புகழாரம்




பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்காகக் குறிப்பிடத்தக்க முயற்சிகளை எடுத்தவர் ஜெயலலிதா எனப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டிப் பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் அவரது படத்துடன் பதிவு வெளியிட்டுள்ளார். அதில், மக்கள் சார்ந்த கொள்கைகளைச் செயற்படுத்தி, அடித்தட்டு மக்களுக்கு அதிகாரமளித்ததற்காக ஜெயலலிதா பரவலாகப் போற்றப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்காக ஜெயலலிதா குறிப்பிடத்தக்க முயற்சிகளை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஜெயலலிதாவுடனான கலந்துரையாடல்கள் தன் மனத்தில் நீங்காமல் இருப்பதாகவும் பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

# உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம்: பிரதமர் மோடியின் பெயர் சூட்டப்பட்டது





நரேந்திர மோடி விளையாட்டு மைதானம் எனபெயர்மாற்றம்செய்யப்பட்டுள்ள அகமதாபாத் மோதிரா கிரிக்கெட் மைதானத்தை குடியரசு தலைவர் ராம் நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.

உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் என கூறப்படும் மோதிரா கிரிக்கெட் மைதானத்திற்கு பிரதமர் மோடியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் அமர்ந்து ரசிக்கக்கூடிய இந்த கிரிக்கெட் மைதானத்தை குடியரசு தலைவர் ராம் நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.

அகமதாபாத்தில் 63 ஏக்கர் பரப்பளவில் மோதிரா விளையாட்டு வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அங்கு இருந்த விளையாட்டு அரங்கு சுமார் 800 கோடி ரூபாய் செலவில் நவீன கட்டக்கலையுடன் உலகின் மிகப்பெரிய விளையாட்டு வளாகமாக மாற்றப்பட்டுள்ளது. கிரிக்கெட் மைதான திறப்பு விழாவில் பேசிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, சர்வதேச தரத்துடன் அமைக்கப்பட்டுள்ள இந்த விளையாட்டு வளாகத்தால், அகமதாபாத் இந்தியாவின் விளையாட்டு நகரமாக புகழ் பெறும் என்றார்.

மோதிரா விளையாட்டு வளாகத்திற்கு சர்தார் வல்லபாய் பட்டேல் பெயர் சூட்டப்பட்டுள்ளதாக அமித் ஷா கூறினார். அகமதாபாத்தில் உள்ள நரன்புராவில் மேலும் ஒரு விளையாட்டு வளாகம் கட்டப்படும் எனவும் அவர் தெரிவித்தார். பட்டேல் விளையாட்டு வளாகத்தில் 3000 கார்கள் மற்றும் 10000 இரு சக்கர வாகனங்களுக்கான நிறுத்துமிட வசதி உள்ளது.

கிரிக்கெட் மைதானத்தில் 25 பேர் அமரக் கூடிய 75 கார்ப்பரேட் தனி அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. எல்லா வசதிகளுடன் கூடிய கிரிக்கெட் அகாடமி, 10 இற்கும் அதிகமான பிட்சுகள் உருவாக்கப்பட்டுள்ளது. கால்பந்து, ஹொக்கி மற்றும் கூடைப்பந்து மைதானங்களும் இந்த வளாகத்தில் உள்ளன.

# புதிய வேளாண் சட்டங்கள் தொடர்பாக ஐயங்கள் இருந்தால் விவாதிக்கத் தயார்

## மத்திய அரசு தெரிவிப்பு



புதிய வேளாண் சட்டங்கள் குறித்து, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மேலும் ஐயங்கள் இருக்குமானால் அதுபற்றி, திறந்த மனதுடன் விவாதிக்க, அரசு தயாராக இருப்பதாக, மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறியுள்ளார்.

நாட்டில் உள்ள விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதில், மத்திய அரசு, உறுதிப்பாட்டுடன் உள்ளதாகவும், வேளாண்மை தழைத்தோங்க புதிய சட்டங்கள் உதவும் என்பதை உறுதியாக நம்புவதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு சுற்று பேச்சுகளின்போதும், விவசாயிகள் எழுப்பிய ஐயங்களுக்கு, உரிய விளக்கம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் தோமர் கூறியுள்ளார். எனவே, மீண்டும் டிராக்டர் பேரணி என்ற அறிவிப்பு, தேவையா என்பதை, விவசாயிகள் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், மத்திய அமைச்சர் தோமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அணுசக்தி ஒப்பந்தத்தை மீறி யுரேனியம் செறிவூட்டல் 60 சதவீதமாக உயர்த்தப்படும் என ஈரான் எச்சரிக்கை

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா கடந்த 2018 ஆம் ஆண்டு வெளியேறியதிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையில் கடுமையான மோதல் போக்கு நீடிக்கிறது.

இந்த சூழலில் அமெரிக்காவில் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்றுள்ளார்.

எனவே அமெரிக்கா மீண்டும் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு திரும்ப ஜோ பைடன் நிர்வாகத்தை ஈரான் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

அதே சமயம் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு முழுமையாக இணங்கி நடந்தால் அந்த ஒப்பந்தத்தில் மீண்டும் இணைவது பற்றி தீவிரமாக பரிசீலிக்கப்படும் என ஜோ பைடன் நிர்வாகம் கூறிவருகிறது.

இந்த நிலையில் அணுசக்தி ஒப்பந்தத்தின் விதிமுறையை மீறி யுரேனியம் செறிவூட்டல் 60 சதவீதமாக உயர்த்தப்படும் என ஈரான் எச்சரித்துள்ளது.

அணுசக்தி ஒப்பந்தத்தின் படி ஈரான் யுரேனியம் எரிபொருளை 3.67 சதவீதத்துக்கும் மேல் செறிவூட்டக் கூடாது என்பது நிபந்தனையாகும். ஏற்கனவே இந்த நிபந்தனையை மீறி விட்ட ஈரான் கடந்த மாதம் யுரேனியம் செறிவூட்டலை 20 சதவீதமாக அதிகரித்தது.

இந்த நிலையில்தான் தேவை ஏற்பட்டால் யுரேனியம் செறிவூட்டல் 60 சதவீதமாக உயர்த்தப்படும் என ஈரான்



மூத்த மத தலைவர் அயத்துல்லா அலி காமெனி தெரிவித்துள்ளார்.

# ஏரியில் படகு கவிழ்ந்து எகிப்தில் 7 பேர் மரணம்

எகிப்து நாட்டின் 3 ஆவது மிகப்பெரிய நகரமான அலெக்சாண்டிரியாவில் மரியட் என்கிற மிகப்பெரிய ஏரி உள்ளது. இந்த ஏரியில் படகு சவாரி பிரபலமானதாகும். தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் இந்த ஏரியில் படகு சவாரி செய்வது வழக்கம். மேலும் இந்த ஏரியில் தீவு ஒன்றும் உள்ளது. சுற்றுலா பயணிகள் படகில் சவாரி செய்து அந்த தீவுக்கு சென்று வருவது வழக்கம்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 15 பேர் படகு ஒன்றில் மரியட் ஏரியில் உள்ள தீவுக்கு சென்றனர். பின்னர் அவர்கள் அங்கிருந்து கரைக்கு திரும்பி கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக ஏரியில் படகு கவிழ்ந்தது.

இதில் படகில் இருந்த அனைவரும் நீரில் மூழ்கினர். இதுபற்றி தகவல் கிடைத்ததும் மீட்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர மீட்பு பணியில் ஈடுபட்டனர். ஆனால் அதற்குள் பெண்கள் சிறுவர்கள் உட்பட 7 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.



அவர்களது உடல்களை மீட்பு குழுவினர் மீட்டனர். மேலும் இந்த விபத்தில் 8 பேர் மாயமாகி உள்ளனர்.

அவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை. இருப்பினும் அவர்களை தேடும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது. விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இது பற்றி தீவிர விசாரணை நடந்து வருகிறது.

# அமெரிக்காவில் ட்ரக் மீது சரக்கு ரயில் மோதி விபத்து

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் சரக்கு ரயில் மீது ட்ரக் மோதி விபத்துக்குள்ளானது.

Milam கவுண்டியில் நடந்த இந்த சம்பவத்தின் போது அந்த ரயில் தடம்புரண்டது மட்டுமின்றி பயங்கர வெடி விபத்தும் ஏற்பட்டது. வாயு ஏற்றிச் சென்ற ரயிலின் 5 பெட்டிகள் வெடித்து சிதறியதால் ஏற்பட்ட தீ பயங்கரமாக கொளுந்து விட்டு எரிந்தது.

விபத்தில் ரயில் ஊழியர்கள் மற்றும் ட்ரக் ஓட்டுனர் உட்பட யாருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.



# மனித முகம் போன்ற தோற்றத்துடன் மீனவர்கள் பிடித்த வெள்ளைச் சுறா


இந்தோனேஷியாவில் மனித முகத்துடன் காணப்பட்ட சுறா ஒன்று பிடிபட்டுள்ளது.

கிழக்கு நியூஷா டென்காரா கடல் பகுதியில் சில மீனவர்கள் மீன் பிடித்த போது அவர்க ளின் வலையில் மனித முகம் போன்ற தோற்றம் கொண்ட சுறா ஒன்று சிக்கியது. அதனைக் கண்ட அவர்கள் ஆச்சரியத்துடன் கரைக்கு கொண்டு வந்தனர்.

கரைக்கு வந்த சிறிது நேரத்தில் இறந்து விட்ட அந்த வெள்ளைச் சுறா மரபணு குறைபாட்டினால் இதுபோன்று பிறந்திருக்க வாய்ப்பு இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# கோல்ப் விளையாட்டின் மன்னன் டைகர் வூட்ஸ்: கார் விபத்தில் சிக்கி காலில் பலத்தகாயமடைவு





கோல்ப் விளையாட்டின் சகாப்தம் டைகர் வூட்ஸ் நேற்று செவ்வாய் இரவு அமெரிக்கா லாஸ் ஏஞ்சல்ஸில் கார் விபத்தில் சிக்கிக் கொண்டார். அவருக்கு காலில் ஏற்பட்ட பலத்த காயங்களுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவரது டுவிட்டர் கணக்கில் வெளியிடப்பட்ட ஒரு தகவலில் அவர் கீழ் வலது கால் மற்றும் கணுக்கால் எலும்பு முறிவுக்கு உள்ளாகியுள்ளதாகவும், அவரது கால் மற்றும் கணுக்கால் காயங்கள் திருகுகள் மற்றும் ஊசிகளால் அறுவைச்சிகிச்சை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தற்போது அவரது மருத்துவமனை அறையில் குணமடைந்து வருகிறார் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 முறை கோல்ப் சம்பியனான இவருக்கு தற்போது 45 வயது ஆகின்றது.

# அமெரிக்கா விமான விபத்து தொடர்பான விசாரணை முடிய ஓராண்டு மேல் ஆகலாம்

அமெரிக்காவில் விமானம் தீப்பிடித்தது தொடர்பான விசாரணை முடிவதற்கு ஓராண்டுக்கும் மேல் ஆகலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யுனெட்டட் ஏயர்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான போயிங் 777 விமானம் கடந்த சனிக்கிழமை கொலராடோவில் இருந்து ஹவாய்க்குபுறப்பட்டுச்சென்றது. அப்போது அதன் வலது பக்க இன்ஜின் தீப்பிடித்து எரிந்தது.

இதையடுத்து அந்த விமானம் பத்திரமாகத் தரையிறக்கப்பட்டது. இந்நிலையில் அந்த விமானத்தில் ப்ராட் அன்ட் விட்னி என்ற இன்ஜின் பயன்படுத்தப்பட்டது.

விமானம் பறந்து கொண்டிருந்த போது ஏராளமான சிதைவுகள் குடியிருப்பு பகுதியில் விழுந்தன. இதையடுத்து தேசிய போக்குவரத்து வாரியம் விசாரணையை முன்னெடுத்தது. இந்நிலையில் விசாரணை முடிய ஓராண்டுக்கு மேல் ஆகலாம் என்று தெரிய வந்துள்ளது.

# ஜப்பானில் அதிகரித்து வரும் தற்கொலை ‘தனிமை’ எனும் பெயரில் தனியாக அமைச்சு

ஜப்பான் நாட்டில் கொரோனா நோய்த்தொற்று பரவலால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்பு, வேலை வாய்ப்பின்மை மற்றும் சமூக தனிமைப்படுத்தல் காரணமாக, கடந்த 11 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குத் தற்கொலை செய்துகொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால், தற்கொலையைத் தடுக்க வேண்டும் என்பதற்காக ‘தனிமை’ எனும் தனித் துறையையே உருவாக்கி அமைச்சரை நியமித்துள்ளது ஜப்பான் அரசு.

ஜப்பான் நாட்டில், தனிமை என்பது நீண்டகாலமாகவே ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. குறிப்பாக ஜப்பான் பெண்கள் இந்தப் பிரச்சினையால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வேலை இல்லாமலும், உரிய வயதடைந்தும் திருமணம் செய்துகொள்ள முடியாமல் தனிமையிலேயே வாழ்ந்து, அதீத மன அழுத்தத்தில் தவித்து வருகிறார்கள். துணை இல்லாமல் இருப்பவர்கள், தனிமையைப் போக்குவதற்காகவே நீண்ட தூரம் பயணித்து, வேலைசெய்து வருகிறார்கள். துணை இல்லாமல் இருப்பவர்கள் தனிமையை உணரக் கூடாது என்பதற்காக, அவர்கள் கையைப் பிடித்துக்கொண்டு இருக்க ரோபோவைக் கூட ஜப்பான் பொறியியலாளர்கள் வடிவமைத்துள்ளனர். அந்த அளவுக்கு, அங்கு தனிமையானது பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இந்த சூழலில் தான், 2020 ஆம் ஆண்டு பரவத் தொடங்கிய கொரோனா நோய்த் தொற்று காரணமாக, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஜப்பான் மக்கள் அதிகம் தனிமையில் வாடத் தொடங்கினர். கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் கொரோனா நோய்த்தொற்றை விடவும் தற்கொலை செய்துகொண்டோரின் எண்ணிக்கை அதிகமாகும். 2020 ஆம் ஆண்டு,



ஒக்டோபர் மாதம் 1,765 பேர் வைரஸ் தொற்றால் உயிரிழந்த நிலையில் 2,153 பேர் தனிமை காரணமாகத் தற்கொலை செய்துகொண்டனர். இதே ஒக்டோபர் மாதத்தில் மட்டும் 879 பெண்கள்தற்கொலைசெய்துகொண்டனர். இது, பெண்களின் தற்கொலையானது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 70வீதம் அதிகம் ஆகும். அந்த அளவுக்கு மோசமாக உள்ளது ஜப்பானின் நிலைமை.

இதனால், ஜப்பான் அரசு மீது விமர்சனங்கள் எழுந்த நிலையில், Tetsushi Sakamoto வை ‘தனிமை அமைச்சராக நியமித்துள்ளார் ஜப்பான் பிரதமர்.

இது குறித்து தனிமை அமைச்சரான Tetsushi Sakamoto, சமூக தனிமை மற்றும் தனிமைப்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கும் மக்களுக்கிடையிலான உறவுகளைப் பாதுகாப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

2017 ஆம் ஆண்டு, இங்கிலாந்து நாட்டில், 90 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தாங்கள் எப்போதும் தனிமையை உணர்வதாகக் கூறியதை யடுத்து, 2018 ஆம் ஆண்டில் தனிமை அமைச்சரை இங்கிலாந்து அரசு முதல் முறையாக நியமித்தது குறிப்பிடத்தக்கது. தற்போது, ஜப்பான் நாடு தனிமை அமைச்சரை நியமித்ததையடுத்து, இது தொடர்வில் ஆஸ்திரேலியாவும் பரிசீலித்து வரு வதாகக் கூறப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கைமீது தாங்கள் கொண்டுள்ள பற்றை தற்போதைய விஜயம் உறுதிப்படுத்தியுள்ளது!

## இம்ரான்கானுக்கு மஹிந்த புகழாரம்



இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் கலாசார மற்றும் மத அடிப்படையில் வரலாற்று ரீதியில் நல்லுறவு காணப்படுகிறது.

இந்த இரு தரப்பு நல்லுறவை சிறந்த முறையில் தொடர்ந்து பேணுவது அவசியமாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானிடம் வலியுறுத்தினார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாட்டுக்கு வருகை தந்துள்ள பாக்கிஸ்தான் நாட்டு பிரதமருக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ இருதரப்பு சந்திப்பு நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை அலரிமாளிகையில் இடம் பெற்றது.

இரு தரப்பு பேச்சின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பின்வருமாறு குறிப்பிட்டார்.

பிரதமர் இம்ரான்கான் அவர்களே, உங்களையும், உங்களின் உயர்மட்ட குழுவினரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலுக்கு பின்னர் நான் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நாட்டுக்கு வரும் முதல் அரச தலைவராக நீங்கள் கருதப்படுகின்றீர்கள்.

எனது அழைப்பை ஏற்று கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் சவாலுக்கு மத்தியில் நீங்கள் இலங்கைக்கு நட்புடன் வருகை தந்துள்ளீர்கள். நீங்களும், உங்கள் நாட்டு மக்களும் இலங்கை மீது கொண்டுள்ள பற்றைத் தற்போதைய விஜயம் உறுதிப்படுத்தியுள்ளது.

பல சவால்களுக்கு மத்தியில் இலங்கைக்கு வருகை தந்துள்ளமை தீர்க்கமான நேரத்தில் தைரியமாக தீர்மானம் எடுக்கும் மனோபாவத்தையும், அரச தலைவருக்கான ஆளுமை பண்பையும் வெளிப்படுத்தியுள்ளது.

20 வருடத்துக்கு முன்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு தங்களின் தலைமைத்துவம் எத்தன்மையில் காணப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

பல வருடகாலமாக செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டமையால் மக்கள் ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்துள்ளார்கள். அடிமட்ட மக்களுக்காக அரச நிர்வாகத்தை முன்னெடுப்பது உங்களின் கொள்கையாகவும் எங்களின் அரசாங்கத்தின் கொள்கையாகவும் காணப்படுகிறது.

இடம் பெறவுள்ள தேர்தலில் நீங்களும், உங்கள் அரசாங்கமும் வெற்றிபெற இலங்கை சார்பில் முற்கூட்டிய வாழ்த்துக்கள்.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான வரலாற்று ரீதியான உறவை தொடர்ந்து சிறந்த முறையில் பேணுவது அவசியமாகும்.

வர்த்தக முதலீட்டாளர்களுடன் நாட்டுக்கு வருகை தந்துள்ளமையை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறேன். பொருளாதார முன்னேற்றத்தில் அரச மற்றும் தனியார் முதலீடுகள் அவசியமானவையாகும்.

2017 ஆம் ஆண்டும், ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்திலும் பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட விஜயம் இலங்கைக்கு சாதகமான தன்மையில் இருந்தது. இரண்டு முறை மேற்கொண்ட விஜயத்தை மறக்க முடியாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இருதரப்பு பேச்சின் போது, இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, அறிவியல், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகிய துறைகளில் இணைந்து பணியாற்றுவதற்கு இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டோம்.

பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கட்டமைப்பிற்குள் வழங்கப்பட்ட வாய்ப்புகளைத் தொடர நாங்கள் இணங்கியுள்ளோம். எமது கலந்துரையாடலின் போது கொவிட் தொற்றுநோய் உள்ளிட்ட பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் சுற்றுலா மற்றும் விமான சேவை துறைகளின் செயற்பாட்டை அதிகரிக்கவும் நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம்.

பாகிஸ்தானின் புரதான பௌத்த பாரம்பரியத்தை இலங்கையர்கள் பார்வையிடுவதை சாத்தியமாக்கிய பாகிஸ்தான் அரசுக்கு நாங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல் பாகிஸ்தான் - இலங்கை நாடாளுமன்ற நட்புறவுக் குழு மூலம் நாடாளுமன்ற தொடர்புகளை மீண்டும் ஆரம்பிக்க நாம் முன்னெடுத்த மற்றுமொரு முக்கியமான தீர்மானமாகும்.

தெற்காசியாவின் நிலையான அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பை அடைவதற்கு அரசியல் ஸ்திரத்தன்மையும் பிராந்திய அமைதியும் முக்கியமாகும் என இலங்கை நம்புகின்றது.

எமது அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் ஒரு முக்கிய அங்கமான வறுமை மற்றும் சமூக - பொருளாதார சமத்துவமின்மையைப் போக்குவதற்கு பிரதமர் இம்ரான் கான் முன்னெடுக்கும் முயற்சிகளை நான் பாராட்டுகிறேன்.

பயங்கரவாதம், மத அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் தொடர்ச்சியாக ஒன்றிணைந்து செயற்படுவோம். சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகம், ஆயுதக் கடத்தல் மற்றும் பிற சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க உரிய முகவர் நிறுவனங்கள் மூலம் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கு தற்போதைய பொறிமுறைகளுடன் முன்னோக்கி செல்வதற்கு எமது கலந்துரையாடல்களில் ஈடுபடுவோம்.

விளையாட்டுத் துறைக்கான ஒத்துழைப்பு மற்றும் நாட்டின் விளையாட்டு பயிற்சி வசதிகளை மேம்படுத்துவதற்கு ஆதரவளித்தமைக்கு பாகிஸ்தானுக்கு நன்றி கூறுகின்றோம். பாகிஸ்தானின் ஓர் உயர்மட்ட பல்துறை வணிகக் குழுவுடன் பிரதமர் இம்ரான்கான் அவர்கள் ஒரு வணிக மற்றும் முதலீட்டு மாநாட்டிற்கு தலைமை தாங்கவுள்ளார்.

இலங்கையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும் இந்த நேரடி வர்த்தக உறவினூடாக இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

# ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு அனுப்பிய கடிதத்தில் சந்தேகம்!

## கஜேந்திரகுமார் வாயால் வடை சுடுகின்றார் காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் காட்டம்

ஐ.நா.மனிதவுரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடருக்கு முன்னராக ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் சந்தேகம் என வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் பணிப்பாளர் திருமதி பத்மநாதன் கருணாவதி தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலேயே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

சந்தேகம் தொடர்பில் பின்னணியில் யார் என்பதை தெளிவாகவும், வெளிப்படையாகவும் நாம் முன்னர் கூறியிருந்தோம் இப்போது அந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

சிங்கள அரசால் தமிழினம் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனவழிப்புக்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமே நீதி கிடைக்கும் என்பதில் உறுதியாக செயற்பட்ட பிரதிநிதிகள் பலர் திட்டமிட்டு சிவகரன், சுமந்திரன் , கஜேந்திரகுமார் போன்றோரால் புறமொதுக்கப்பட்டனர்.

பல மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், கட்சிகள், யாழ் பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள், மத தலைவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள், கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீதியில் நீதிக்காக நின்று கதறிக்கொண்டு இருக்கின்றவர்களின் பிரதிநிதிகள் கூட இங்கே திட்டமிட்டு புறமொதுக்கப்பட்டனர்.

இவர்கள் யாவரும் சர்வதேச விசாரணையை வலுயுறுத்துபவர்கள். இதில் சிலர் ஜெனிவா சென்று சாட்சியம் வழங்கியவர்கள் அனைவருமே திட்டமிட்டு புறமொதுக்கப்பட்டனர்.

இவ்வாறானவர்களை புறமொதிக்கியதன் பின்னணியில் சிவகரன், சுமந்திரன், கஜேந்திரகுமார் போன்றோர்கள் உள்ளனர்.

பிரித்தானியாவில் சுமார் இருநூறுக்கு மேற்பட்ட பொது அமைப்புக்கள் இணைந்து பிரித்தானிய பிரதமர் உள்ளிட்ட உறுப்பு நாடுகளுக்கும் சர்வதேச விசாரணையை துரிதமாக வலியுறுத்தி கடிதங்கள் அனுப்பப்பட்டன. அதுவே மிகவும் பலமான கோரிக்கையாகும்.

ஆனால் இங்கு என்ன நடந்தது இனவழிப்பு நடந்த வடக்கு கிழக்கு தமிழரின் பூர்வீக தேசத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பொது அமைப்புக்கள் உள்ளிட்ட பல மக்கள் பிரதிநிதிகள் இருந்த போதும் நீதி கோரல் விடயத்தில் அவர்களை ஒருங்கிணைக்கவும் இல்லை கையொப்பம் வைக்க சந்தர்ப்பமும் வழங்கப்பட்ட வில்லை இதை கழுத் தறுப்பு என மட்டும் கூற முடியாது சிங்கள தேசத்தை சர்வதேசத்தில் தப்ப வைப்பதற்கான சதி என்றே கூற முடியும்.

சர்வதேச சமூகத்தை பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகம் தொடர்பில் ஆராய்ந்தால் அவர்களுக்கு நீதியைக் கோருபவர்கள் யாரென்றால் மூன்று கட்சியும் இரண்டு பொது அமைப்பும் இரண்டு தனி நபரும் இவ்வாறான சூழ்நிலையால் தான் இதுவரை சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை என்ற ஒரு சொல் கூட சர்வதேச சமூகத்தின் அறிக்கையில் காணப்படவில்லை காரணம் என்ன?

இங்கு உள்ள ஏனைய பொது அமைப்புகள் கட்சித் தலைவர்கள் விரும்பவில்லை என்ற விடயத்தை சர்வதேச சமூகம் ஆராய்ந்ததன் நிமித்தம் தமிழருக்கான சாதகமான அறிக்கை வரவில்லை இந்த யதார்த்தத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

உறுப்பு நாடுகளுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பின்னர் பல்வேறு பட்ட விமர்சனங்கள் வந்த பின்னர் சொன்னார்கள் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு பலம் வழங்க முன்னர் கையொப்பம் இடாதவர்களை ஒருங்கிணைத்து அதில் கையொப்பம் வைத்து அனுப்புவதாக கஜேந்திரகுமாரால் பொய் கூறப்பட்டது. 35 நாள்கள் கடந்தும் அது நடத்தப்படவில்லை என்றால் இவர்களின் கொள்கைக்கு சரிவு ஏற்பட்டதா?

சர்வதேச சமூகத்திடம் இருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த ஒரு நன்மையும் இல்லாத ஓர் அறிக்கை தான் வரப்பட்டுள்ளது. இதன் பின்னர் நாங்கள் இவர்களின் நிலைமையை அறிவதற்கு 24 ஆம் திகதி பொது அமைப்புக்களும் தமிழ்த்தேசியக் கட்சிகள் எல்லோருக்குமாக சேர்த்து ஒரு சந்திப்பை ஏற்படுத்துவதற்காக ஊடகங்கள் ஊடாக அறிவித்தோம் இந்த தீர்மானம் தொடக்கத்திலேயே கஜேந்திரகுமாரால் தோற்கடிக்கப்பட்டது.

எமது தொலைபேசிக்கு தொடர்பு கொண்ட கஜேந்திரகுமார் அறிக்கை தயாரிக்க பொத்துவில் சுவாமி கொழும்பு வரும்படி நேற்று கூறிவிட்டார் என அப்பட்டமான பொய்யை கூறி ஒற்றுமை தன்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டார்.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக சர்வதேச விசாரணையை தங்கள் கட்சி மட்டும் தான் வலியுறுத்தி வருகின்றது என வாயால் வடை சுடும் இவர்கள் சர்வதேச விசாரணையை ஓர் அங்குலம் ஏனும் முன்னெடுத்தார்களா? அல்லது இனவழிப்பு தொடர்பில் ஓர் ஆவணம் கூட இவர்களிடம் இருக்கின்றதா?

சர்வதேசத்தில் இலங்கையை காப்பாற்ற தீவிர முயற்சி செய்யும் இவர்களை உண்மையில் மக்கள் இனம் காணவேண்டும். நாம் எமது முன்னைய சந்திப்புகளில் மிகவும் திடமாக உளவுத்துறைகளின் பின்னணி என குறிப்பிட்டு இருந்தோம். இவ்வளவு நாள்களின் பின்னர் நீங்கள் இப்போது அதன் நிதர்சனத்தை ஊடகங்கள் வாயிலாக எமக்கு பின்னால் அறையவில்லை, முகத்தில் ஓங்கி அறைந்துள்ளார்கள் என அறிந்துள்ளீர்கள்.

இனியாவது நாம், கனவுகளில் இருந்து அகல வேண்டும். எமக்கான போராட்ட வெளிகளை, நாம் உருவாக்க வேண்டும். மக்களைப் போராட்டத்தின் மையமாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தனி நாடோ, மாகாணமோ வேண்டாம் அடக்கம் செய்யும் உரிமையைத் தா!

## கட்டாய தகனத்துக்கு எதிரான தேசிய அமைப்பு ஆர்ப்பாட்டம்








தனி மாகாணத்தையோ,தனி நாட்டையோ கோரவில்லை. முஸ்லிம் சமூகத்தினரது அடிப்படை உரிமையினையே கோருகிறோம்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தினரது உடல்களை பலவந்தமான முறையில் தகனம் செய்வதை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

விசேட வைத்திய நிபுணர்கள் பரிந்துரைத்த அறிக்கையை உண்மைத்தன்மையுடன் அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கட்டாய தகனத்துக்கு எதிரான தேசிய அமைப்பினர் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த எதிர்ப்பு போராட்டத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் அமைப்பினர், தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் என பெரும்பாலானோர் கலந்துகொண்டார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் முஜ்புர் ரஹ்மான் தெரிவிக்கையில் -

அரசாங்கம் இனவாத கொள்கையை முன்னிலைப்படுத்தி தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமைகளை முடக்குகிறது.

கடந்த ஒரு வருடகாலமாக முஸ்லிம் சமூகத்தினரது உடல்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் இஸ்லாமிய மத கோட்பாடுகளுக்கு முரண் என்பதை நன்கு அறிந்தும். இனவாதிகளின் நோக்கத்துக்கான முழு அரசாங்கமும் ஒன்றிணைந்து செயற்படுகிறது.

நாட்டு மக்கள் அனைவரது உரிமைகளையும் பாதுகாப்பது ஜனாதிபதியின் பொறுப்பாகும்.ஆனால் அவர் தமிழ் பேசும் மக்கள் மற்றும் அவர்களின் உரிமை தொடர்பில் அக்கறை கொள்ளவில்லை.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல்கள் பலவந்தமான முறையில்தகனம் செய்வதற்கு நாடாளுமன்றிற்குள்ளும், வெளியிலும் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினோம்

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல்களைப் புதைப்பதா அல்லது தகனம் செய்வதா என்ற விடயத்தில் எழுந்துள்ள முரண்பாட்டுக்குத் தீர்வு காணும் வகையில் வைத்திய துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு கடந்த வருடம் நியமிக்கப்பட்டது.

கொவிட் -19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடலை சுகாதார பாதுகாப்பு வழிமுறைக்கு அமைய அடக்கம் செய்யலாம். இதனால் பௌதிக காரணிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என வைத்திய நிபுணர்கள் கடந்த டிசெம்பர் மாதம் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்ய முடியும், அதற்கு அனுமதி வழங்குவோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் குறிப்பிட்டார்.

ஆனால் பிரதமரின் தீர்மானத்தை ஏனைய தரப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பிரதமரின் கருத்துக்கு மதிப்பளிக்காமல் ஒரு தரப்பினர் இனவாதத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு ஆதரவை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அரசாங்கம் இஸ்லாமிய நாடுகளிடம் தஞ்சம் புகுந்துள்ளது.

நாட்டுக்கு வருகை தந்துள்ள பாகிஸ்தான் நாட்டு பிரதமர் இம்ரான் கானிடம் இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் எதிர்க் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகக் குறிப்பிட அனுமதி கோரியிருந்தோம். ஆனால் அதற்கு அனுமதி கிடைக்கப் பெறவில்லை. பாகிஸ்தான் பிரதமர் முஸ்லிம் பிரதிநிதிகளை சந்திக்காமலிருக்க அரசாங்கம் சூழ்ச்சி செய்கிறது. எமது உரிமையினை பெற்றுக்கொள்ள தொடர்ந்து போராடுவோம் என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் -

பௌத்த கொள்கைக்கு அமைய செயற்படுகிறோம் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் பௌத்த கொள்கைக்கு முற்றிலும் முரணாகச் செயற்படுகிறது. இனவாதத்தை முன்னிலைப்படுத்தி செயற்படும் நாடுகள் நெடுகாலம் ஆட்சியில் இருந்ததாக சரித்திரம் இல்லை. கடும்போக்கில் செயற்பட்ட அரசாங்கத்தின் நிலையைத் தற்போதைய அரசாங்கம் மீட்டிப்பார்க்க வேண்டும்.

வெளிவிவகார கொள்கையி லும், தேசிய நல்லிணக்க விவகா ரத்தி லும் ராஜபக்ஷர்களின் ஆட்சி தோல்வியடைந்துள்ளது.

ஜெனிவா விவகாரத்தில் இருந்து தம்மைப் பாதுகாக்க அரசாங்கம் இஸ்லாமிய நாடுகளின் உதவியை கோருகிறது. மறுபுறம் இலங்கை வாழ் பாரம்பரிய முஸ்லிம் மக்களின் உரிமைகளை திட்டமிட்டு முடக்குகிறது. தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமைகள் பெரும்பான்மை அரசாங்கத்தால் பலவந்தமான முறையில் வஞ்சிக்கப்படுவதை சர்வ தேச நாடுகள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அரசாங்கத்தின் கொடுங்கோல் நிர்வாகத்தால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகிறார்கள். அரசியல் நோக்கிற்காகவும், ஆட்சியில் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காகவும் அரசாங்கம் தமிழ், முஸ்லிம் சமூகத்தின் மீது இனவாதத்தை கட்ட விழ்த்து விடுகிறது. அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை இணைத்து பொலிகண்டி தொடக்கம் பொத்துவில் வரையிலான பேரணி முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பேரணியில் முஸ்லிம் மக்கள் முழுமையான ஆதரவை வழங்கினார்கள். முஸ்லிம் சமூகத்தினரது உரிமைகளைப் பாதுகாக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்ந்து ஆதரவு வழங்கும். - என்றார்.


**A/L 2021, 2022**
**புவியியல் A+**
**DCM - யாழ்நகர்**
**முழுநிலாக் கருத்தரங்கு : 01**
**"தேசப்படங்கள்"**
**காலம் :- 26.02.2021**
**நேரம் :- 10 - 02 pm**
ஆசிரியர்:- P.S.V. **தினேஸ்** B.A (Hons) Geo.Spl
Dip in GIS & RS, M.phil in Geography
* Multimedia ஊடான கருத்தரங்கு
* வெளிமாணவர்கள் அனைவரும் இணைந்து கொள்ளலாம்.
* கையேடுகளிற்கான கட்டணம் மட்டும் அறவிடப்படும்.








# கல்யாணமாலை



**வட சர்வதேச திருமண சேவை**

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1976.07.21 | பிறந்த திகதி - 1987.11.09 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - பரணி | நட்சத்திரம் - மிருகசீரிடம் 4 |
| செவ் - 01இல் | செவ் - 07இல் |
| பாவம் - 64 | பாவம் - 38 1/2 |
| கல்வி - A/L | கல்வி - A/L |
| தொழில் - புடைவைக்கடை காசாளர் | தொழில் - பிரான்ஸ் PR |
| எதிர்பார்ப்பு - சாதாரண பெண். | எதிர்பார்ப்பு - பிரான்ஸ், UK, சுவிஸ் மணமகன் தேவை. |

**யாழ் காலைக்கதிரில் காலை, மாலைப் பதிப்பிலும் முகநூலின் ஊடாகவும் மணமக்கள் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.**
**அலுவலக நேரம் - எல்லா நாள்களும் காலை 8.30 தொடக்கம் 5.30 வரை.**
**பதிவுக் கட்டணம் 1000 + 300**
**Facebook - Kalyanamalaivada.com**

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

076 885 6925
077 857 8528


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.02.2021இல் வெளியிடப்பெற்றது.